# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–600 006

## எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வு, மார்ச் – 2013

## தேர்வுக்கால அட்டவணை

நேரம் : முற்பகல் 10.00 மணி முதல் 10.10 மணி வரை – வினாத்தாள் படிக்க
10.10 மணி முதல் 10.15 மணி வரை – விடைத்தாளில் விவரங்கள் பதிய
10.15 மணி முதல் பிற்பகல் 12.45 மணி வரை – தேர்வு எழுத
(அனைத்து பாடங்களுக்கும்)

| நாள் | கிழமை | பாடம் |
|---|---|---|
| 27.03.2013 | புதன் | மொழித்தாள் – I |
| 28.03.2013 | வியாழன் | மொழித்தாள் – II |
| 29.03.2013 | வெள்ளி | –––புனித வெள்ளி––– |
| 30.03.2013 | சனி | ––– |
| 31.03.2013 | ஞாயிறு | ––– |
| 01.04.2013 | திங்கள் | ஆங்கிலம் தாள் – I |
| 02.04.2013 | செவ்வாய் | ஆங்கிலம் தாள் – II |
| 03.04.2013 | புதன் | ––– தேர்வு இல்லை––– |
| 04.04.2013 | வியாழன் | ––– தேர்வு இல்லை––– |
| 05.04.2013 | வெள்ளி | கணிதம் |
| 06.04.2013 | சனி | ––– |
| 07.04.2013 | ஞாயிறு | ––– |
| 08.04.2013 | திங்கள் | அறிவியல் |
| 09.04.2013 | செவ்வாய் | ––– தேர்வு இல்லை––– |
| 10.04.2013 | புதன் | ––– தேர்வு இல்லை––– |
| 11.04.2013 | வியாழன் | தெலுங்கு வருடப்பிறப்பு |
| 12.04.2013 | வெள்ளி | சமூக அறிவியல் |

சென்னை–6
நாள் : 12.12.2012

ஒம்/–
அரசுத் தேர்வுகள் இயக்குநர்

**DIRECTORATE OF GOVERNMENT EXAMINATIONS, CHENNAI–600 006**

**S.S.L.C. EXAMINATION, MARCH – 2013**

**TIME TABLE**

**Hours : 10.00 a.m. to 10.10 a.m. – Reading the Question Paper**
**10.10 a.m. to 10.15 a.m. – Filling up particulars in the answer sheet**
**10.15 a.m. to 12.45 p.m. – Duration of the Examination.**

| DATE | DAY | SUBJECT |
|---|---|---|
| 27.03.2013 | WEDNESDAY | LANGUAGE PAPER – I |
| 28.03.2013 | THURSDAY | LANGUAGE PAPER – II |
| 29.03.2013 | FRIDAY | ---GOOD FRIDAY--- |
| 30.03.2013 | SATURDAY | ----- |
| 31.03.2013 | SUNDAY | ----- |
| 01.04.2013 | MONDAY | ENGLISH PAPER – I |
| 02.04.2013 | TUESDAY | ENGLISH PAPER – II |
| 03.04.2013 | WEDNESDAY | --- NO EXAMINATION--- |
| 04.04.2013 | THURSDAY | --- NO EXAMINATION--- |
| 05.04.2013 | FRIDAY | MATHEMATICS |
| 06.04.2013 | SATURDAY | ----- |
| 07.04.2013 | SUNDAY | ----- |
| 08.04.2013 | MONDAY | SCIENCE |
| 09.04.2013 | TUESDAY | --- NO EXAMINATION--- |
| 10.04.2013 | WEDNESDAY | --- NO EXAMINATION--- |
| 11.04.2013 | THURSDAY | TELUGU NEW YEAR |
| 12.04.2013 | FRIDAY | SOCIAL SCIENCE |

**CHENNAI-6** **Sd/-**
**Date : 12.12.2012** **DIRECTOR**

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – எஸ்.எஸ்.எல்.சி. பழைய பாடத்திட்டத்தின் கீழ் தேர்வெழுதிய தேர்வர்கள் – மார்ச் 2013 தேர்விற்கு புதிய பாடதிட்டத்தில் தேர்வெழுத ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (வி1) துறை

<u>அரசாணை (1டி) எண் 431,</u> <u>நாள் : 26.12.2012.</u>

<u>திருவள்ளுவராண்டு 2043.</u>

<u>படிக்கப்பட்டவை.</u>

1. அரசாணை (1டி) எண் 384, பள்ளிக் கல்வித் துறை, நாள் 16.11.2011.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.031425/பி1/11, நாள் 1.11.2012.

------

<u>ஆணை</u> :-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மார்ச் 2012ல் முதன்முறையாக இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு எழுதுபவர் (பள்ளி மாணவர் / தனித் தேர்வர்) சமச்சீர் கல்வி பாடத்திட்டத்தில் மட்டுமே தேர்வெழுதிடவும், நடைமுறையிலிருந்த பழைய பாடத்திட்டத்தில், தோல்வியுற்றவர்கள் தனித் தேர்வர்களாக அவர்கள் தோல்வியுற்ற பாடங்களை தேர்வெழுத வாய்ப்பளிக்கும் பொருட்டு அப்பாடங்களில் மார்ச் 2012 மற்றும் செப்டம்பர் / அக்டோபர் 2012 (ஜுன் / ஜுலை 2012 உடனடித் தேர்வுகளை உள்ளடக்கி) ஆகிய இருபருவத் தேர்வுகளை மட்டும் நடத்தவும் அதன்பின் புதிய பாடத்திட்டத்தில் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. அரசுத் தேர்வுகள் இயக்குநர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் எஸ்.எஸ்.எல்.சி. பழைய பாடத்திட்டத்தில் அக்டோபர் 2012 தேர்வு எழுதி தோல்வியுற்றவர்கள் அல்லது தோல்வியுற்றும் தேர்வு எழுதாதவர்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளபடி பகுதி முறையில் தேர்வு எழுதும் திட்டத்தின்கீழ் தோல்வியுற்ற / வருகைபுரியாத பாடங்களை புதிய பாடத்திட்டத்தில் (Compartmental system) தேர்வெழுத அனுமதித்து அன்னார் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி அடைய வாய்ப்பு வழங்க அனுமதிக்கலாம் என்றும், மேலும், மெட்ரிக் தேர்வு மற்றும் ஆங்கிலோ–இந்தியன் தேர்வுகளை கடைசி வாய்ப்பாக அக்டோபர் 2012ல் தேர்வு எழுதி தோல்வியுற்ற தேர்வர்கள், எஸ்.எஸ்.எல்.சி. பாடத்தில் தேர்வெழுத இயலாது. ஏனெனில் மெட்ரிக் / ஆங்கிலோ–இந்தியன் ஆகியவை தனித்தனி வாரியம் ஆகும். ஒரு வாரியத்திலிருந்து மற்றொரு வாரியத்தில் தேர்வு எழுத விதிகளின்படி இயலாது என்பதால் அம்மாணவர்கள் மார்ச் 2013 முதல் எஸ்.எஸ்.எல்.சி. புதிய பாடத்திட்டத்தின்கீழ் நடைபெறும் தேர்வில் அனைத்து பாடத் தேர்வுகளையும் தேர்வெழுதி தேர்ச்சி பெற வேண்டும் என்றும், அவ்வாறு தேர்வெழுதும் மெட்ரிக் / ஆங்கிலோ–இந்தியன் தேர்வர்கள் ஏற்கனவே தேர்வெழுதி தோல்வி அடைந்து தம்வசம் உள்ள மதிப்பெண் சான்றிதழ்களை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பித்தே தேர்வெழுத வேண்டும் என்றும், ஓ.எஸ்.எல்.சி.யை பொறுத்தமட்டில் மொழித்தாளினைத் தவிர மற்ற பாடங்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாடத்திட்டத்தின்படி நடைபெறுவதால் அம்மாணவர்களும் தோல்வியுற்ற பாடங்களை மட்டும் எஸ்.எஸ்.எல்.சி. புதிய பாடத்திட்டத்தில் உள்ளபடியே எழுத அனுமதிக்கலாம் என்பதற்கான அரசாணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து அதனை ஏற்று கீழ்க்கண்டவற்றுக்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

I. எஸ்.எஸ்.எல்.சி. பழைய பாடத்திட்டத்தில் அக்டோபர் 2012 தேர்வு எழுதி தோல்வியுற்றவர்கள் அல்லது தோல்வியுற்றும் தேர்வு எழுதாதவர்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளபடி பகுதி முறையில் தேர்வு எழுதும் திட்டத்தின் கீழ் தோல்வியுற்ற / வருகைபுரியாத பாடங்களை புதிய பாடத்திட்டத்தில் தேர்வெழுத அனுமதிக்கலாம்.

II. அக்டோபர் 2012ல் மெட்ரிக் தேர்வு மற்றும் ஆங்கிலோ–இந்தியன் தேர்வுகளை எழுதி தோல்வியுற்ற தேர்வர்கள், மார்ச் 2013 முதல் எஸ்.எஸ்.எல்.சி. புதிய பாடத்திட்டத்தின்கீழ் அனைத்து பாடத் தேர்வுகளையும் தேர்வெழுதி தேர்ச்சி பெற வேண்டும். மேலும் மெட்ரிக் / ஆங்கிலோ–இந்தியன் தேர்வர்கள் ஏற்கனவே தேர்வெழுதி தோல்வி அடைந்து தங்களிடம் உள்ள மதிப்பெண் சான்றிதழ்களை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பித்த பின்பு தேர்வெழுத வேண்டும்.

III. OSLC-யை பொறுத்தமட்டில் மொழித்தாளினைத் தவிர மற்ற பாடங்கள் SSLC பாடத்திட்டத்தின்படியே நடைபெறுவதால் அம்மாணவர்களும் தோல்விவுற்ற பாடங்களை மட்டும் SSLC புதிய பாடத்திட்டத்தில் உள்ளபடியே தேர்வெழுத அனுமதிக்கலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
இருப்புக் கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.